MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 1 AUG -2024
E-ISSN : 2584 - 1238

# ஆளுமை நோக்கில் இராவணன்

திருமதி **ச.மீனாட்சி**,
உதவிப் பேராசிரியர்,முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,சிவகாசி.
meenakshis-tam@sfrcollege.edu.in
DOI 10.5281/zenodo.13051674.

**Abstract :**

**Psychology is the study of the nature of the soul. Personality is one of the psychological components. Ravana Kapiyam is a kapiyam based on the idea of restoring the character of the antagonistic leader Ravanan. In this poem, the poet has successfully restored the cultural pride of the Tamil society with its Poet Kulandhai tradition. The personality of each person is different. Ravana, a Dravidian, is a man whose virtues are immeasurable. This review article is intended to highlight the merits of such a proud Ravanan from the point of view of personality.**

**Key Words : Psychology - Kappiyam - Ravanan - Personality**

## முன்னுரை

உள்ளத்தின் தன்மைகளைப் பற்றி ஆய்வதே உளவியல். உளவியல் கூறுகளுள் ஒன்றே ஆளுமை. எதிர்நிலைத் தலைவனான இராவணனின் பண்புநலனை மீட்டெடுக்கும் பொருண்மையில் அமைந்த காப்பியமே இராவண காப்பியம். இக்காப்பியத்தில் புலவர் குழந்தை நெடிய பாரம்பரியம் கொண்ட தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டுப் பெருமைகளைச் சிறப்பாக மீட்டெடுத்துள்ளார். ஒவ்வொரு மனிதரிடமும் காணப்படும் ஆளுமைத்திறனானது பலவாறு வேறுபடுகின்றது. திராவிடனாகிய இராவணனின் பண்புநலனானது அளவிடற்கரியது. இத்தகைய பெருமை மிகுந்த இராவணனின் சிறப்பினை ஆளுமை நோக்கில் எடுத்துரைப்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

## ஆளுமை

உளவியல் துறையின் ஒரு பிரிவே ஆளுமை (personality) ஆகும். ஆளுமை என்ற சொல்லானது, "ஆங்கிலத்தில் 'பெர்ஸனாலிட்டி' (personality) என்று அழைக்கப்படுகின்றது. இவை இலத்தீன் மொழியான 'பெர்ஸொனா' என்னும் சொல்லில் இருந்து பிறந்தது. நாடக மேடையில் நடிப்பவர்கள் தாங்கள் ஏற்றிடும் பாத்திரத்தின் இயல்புக்குத் தக்கப்படி ஒரு முகமுடியை அணிந்து கொண்டு நடித்தனர். இத்தகைய முகமுடியைக் குறிக்கும் சொல்லே இலத்தீன் மொழியான 'பெர்ஸொனா' ஆகும்."[1] ஆளுமையானது தற்சமயம் ஒருவரது பண்பினைக் குறிக்கும் சொல்லாகவே ஆளப்படுகின்றது. ஆளுமை என்பதற்கு ஆல்போர்டு என்பவர், "சூழ்நிலையோடு (Environment) இணங்கிப் போகும் தன்மை"[2] என்று மனதின் அடிப்படையில் ஆளுமையினை விவரிக்கின்றார்.

## இராவணனின் ஆளுமை


http://Creativecommons.org//license/by/4.0/.

காப்பியங்கள் காலத்தின் கண்ணாடிகளாக அமைகின்றன. பிற்கால காப்பியங்களில் ஒன்றான இராவண காப்பியம். இராவணனின் ஆளுமையை எடுத்தாளும் பொருண்மையில் அமைந்த காப்பியமாகும். இக்காப்பியத்தின் வாயிலாக புலப்படும் இராவணனின் ஆளுமையை,

- ஆளுமைக்கூறுகள்
- ஆளுமைப்பரிமாணங்கள்

என்ற முறைகளில் பிரித்து ஆராயலாம். இராவணனின் வீரம் போற்றுதலுக்குரியது. இவன் சிறந்த சிவபக்தனும் ஆவான். அரசாட்சியில் தனது ஆளுமைப்பண்பால் பிறரை ஆளும் தன்மையையும் உடையவன் இராவணன்.

**ஆளுமைக் கூறுகள்**

இராவணன் ஆளுமைப் பண்பை தன்னகத்தே கொண்டுள்ளான். ஒருவரது நடத்தை, எண்ணம், மனவெழுச்சி போன்றவற்றை ஒருவரிடம் குறிப்பிட்டு ஆய்வதே ஆளுமையாகும். இராவணனின் சிறந்த பண்பானது அவனது ஆளுமைத் தன்மையால் புலனாகின்றது. தமிழ் விக்கிப்பீடியா ஆளுமைக் கூறுகளை,

- "உருவ ஆளுமை
- உள்ள ஆளுமை"[3]

என்ற இரண்டு முறைகளில் வகைப்படுத்துகின்றது. இவ்விரு ஆளுமைத் தன்மையையும் கொண்டவனாக இராவணன் திகழ்கின்றான்.

**உருவ ஆளுமை**

ஆளுமை என்பது உடற்பண்புகள், மனப்பண்புகள், சமூக அறநெறிப் பண்புகள், மனப்பான்மைகள் போன்ற எல்லா பண்புகளும் இணைந்த முழுமையான கலவையாகும் என்று உளவியலறிஞர் குறிப்பிடுகின்றார். ஆளுமையானது ஒருவரிடம் காணப்படும் உடற் கவர்ச்சியும், முகஅழகும் என்று அறியா மக்கள் கருதுகின்றார். இதனையே உளவியலறிஞர் 'உருவ ஆளுமை' என்று குறிப்பிடுகின்றார். உருவ ஆளுமையானது மூன்று காரணிகளாகக் குறிப்பிடப்படுகின்றன. அவையாவன 1.உடை 2.உடல் நலன் 3.தோற்றப் பொலிவு என்பதாகும். இவற்றுள் இராவணனின் உருவ ஆளுமையானது அவனது தோற்றப் பொலிவின் வாயிலாக வெளிப்படுகின்றது என்பதை,

> **"போற்றியே பெற்றவர் புனைந்த பேரினுக்**
> **கேற்ற பேரழகினான் இனிமை நோக்கினான்"** **(இராவண:இலங்கை:**1.27)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. சூரியனும் வெட்கும் படியான மேனி அழகினை உடையவன் இராவணன். பிறருடன் ஒப்புமை கூற முடியாத பேரழகன் என்று அவனது உருவம் வருணிக்கப்படுகின்றது. மேலும் போர்க்களத்தில் தன் தேரை நிறுத்தி நிற்கும் இராவணது உருவ ஆளுமைத் தன்மையை,

> **"செங்கதிர் போன்ற மேனி திகழொளி சூழப் பெற்ற**
> **மங்கல வுருவினோடு வாய்ந்த கட்டழகு மிக்கான்"** **(இராவண:போர்:**9.7)


http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றன. இராவணனின் உருவ ஆளுமை அவனது கம்பீரத்தன்மையை புலப்படுத்துவதாகவும் தலைமைத் தன்மையை உணர்த்துவதாகவும் அமைகின்றது.

**உள்ள ஆளுமை**

தன் உள்ளத் திறனால் பிறரை ஆளும் தன்மையே உள்ள ஆளுமை ஆகும். இத்தகைய ஆளுமையை பெற்றவனாக இராவணன் திகழ்கின்றான். உள்ள ஆளுமையாது ஆழமானதாகும். உடல் ஆளுமையை விட உள்ள ஆளுமை சிறப்பானதும் ஆகும். இவ்வாளுமையானது, "மனப்பான்மை மற்றும் தலைமைப் பண்புகளால் தீர்மானிக்கப் படுவதாகும்." இராவணனின் ஆளுமைப் பண்பும் ஆழமான உள்ள ஆளுமைத்திறன் உடையது என்பதனை,

**"இயற்றி யொண் பொருள் வரும் வழிகளை யவற்றீட்டி**
**முயற்சியோ டவை காத்தவை முறையொடு குடிகள்**
**செயற்றிறம் பட வருத்துமே செந்தமிழ்ப் பொருணூல்**
**பயிற்று நன்னெறி பயிற்றியே பெரும் புகழ் படைத்தான்" (இராவணா:இலங்கை:8:3)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. இராவணனின் தலைமைப் பண்பானது அவனது உள்ள ஆளுமைத் தன்மைக்கு தக்கச் சான்றாகிறது. வரும் பொருளினை இயற்றல், ஒண்பொருள்களை ஈட்டல், அப்பொருளை முயற்சியோடு காத்தல், காக்கின்ற பொருள்களை மக்களுக்கு முறையாக வகுத்தல் என்ற முறையானது இராவணனின் தலைமைப் பண்பினை உணர்த்துவதாகும். அவனது தலைமைப் பண்பானது, உடல் ஆளுமையை விட உள்ள ஆளுமையில் மிளிரச் செய்கின்றது. ஒருவரிடம் உள்ள ஆளுமையானது உயர உயர பிறர் நலன், பொது தன்மை, அடுத்த தலைமுறை, மக்கள் மீது அக்கறை என்று மனமானது அகன்ற பார்வையுடையதாக மாறுகின்றது. இத்தகைய ஆழமான உள்ள ஆளுமைத் திறனைப் பெற்று இராவணன் தன் நாட்டை ஆட்சி செய்கின்றான்.

**ஆளுமைப் பரிமாணங்கள்**

ஆளுமையின் பல்வேறு பாகங்களை ஆய்வு செய்த முனிவர்கள் 'வேதாந்தவழி' இதன் அமைப்பினை நிர்ணயித்துள்ளார்கள். ஆளுமைப் பரிமாணங்கள் மனிதனின் ஆளுமைப் பண்பை உருவாக்குகின்றன. எஸ்.சுந்தர சீனிவாசன் தன் நூலில் ஆளுமைப் பரிமாணத்தை,

1. "உடலியல் ஆளுமை (அண்மையகோசா)
2. ஆற்றல் ஆளுமை (பிராணகோசா)
3. மன ஆளுமை (மனோமயகோசா)
4. அறிவு ஆளுமை (விஞ்ஞானமயகோசா)
5. மகிழ்வு ஆளுமை (ஆனந்தமயகோசா)"[4]

என்று குறிப்பிட்டுள்ளார். இராவணனின் ஆளுமைப் பண்பானது மகிழ்வு ஆளுமையைத் தவிர்த்து ஏனைய பண்புகளில் வெளிப்படுகின்றது. இராவணன் தனது ஆளுமைப் பண்பினால் காப்பியத்தில் மிளிர்கின்றான். தான் பெற்ற ஆளுமைப் பண்பினால் இராவணன் மேன் மேலும் உயர்வாக ஆட்சி புரிகின்றான்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**ஆற்றல் ஆளுமை**

பிறரைக் காட்டிலும் குறிப்பிட்ட ஒரு பண்பிலோ (அல்லது) திறனிலோ மிகச் சிறந்து விளங்குபவனை சிறந்த ஆற்றல் உடையவன் என்கிறோம். இத்தகைய ஆற்றலே ஆளுமை என்றும் வழங்கப்படுகின்றது. இராவணன் சிறந்த அரசனாக ஆட்சி புரிவதின் வாயிலாக அவனது ஆற்றல் ஆளுமையானது புலனாகின்றது. ஒற்றர்கள் இராவணனிடம் ஆரியர்கள் தங்கியுள்ள பகுதியை குறிப்பிடுகின்றனர். இராமனிடம் தூது அனுப்ப இராவணன் 'திறமையான அதிகாயனே இச்செயலுக்கு பொருந்தியவன்' என்பதை குறிப்பிடும் பாங்கினை,

**"மனத்திடை மதித்த வாற்றை மதிவலியமைச் சர்க்கோதத்**
**தனித் தமிழரசர் கோவே தகுந்தகு மெனயாரென்ன**
**அனைத்தை யுமுணர்ந்து கூறுமமையதி காயனேயிவ்**
**வினைத் திறத்தமை வானென்ன வேந்தனுந் தகுந்தானென்றே" (இராவண.போர்.1:4)**

என்ற பாடலடிகளால் அறியலாம். அமைச்சர்களிடம் தன் கருத்தை கூறி தகும் அரசே என்று அவர்கள் கூறியதும் அதிகாயனை தூதுக்கு அனுப்பினான். அரசனின் பண்புகளுள் ஒன்றான ஆலோசித்து செயல்படும் தன்மையை பெற்றுள்ளதால் இராவணனின் ஆற்றல் ஆளுமையானது அளவிடற்கரியது. மேலும் இச்செயலுக்கு உரியவன் இவனே என்று நன்கு ஆராய்ந்து தூதுக்கு அனுப்பும் இராவணது ஆற்றல் ஆளுமை சிறப்பிற்குரியது.

**மன ஆளுமை**

மன ஆளுமையின் முக்கியப் பண்பு மனதைக் கட்டுப்படுத்துவது ஆகும். மனக்கட்டுப்பாடு, தன்னலமின்மை, மனஉறுதி ஆகியன இவ்வாளுமையில் அடங்கும். இராவணன் மனதிட்பம் உடையவன். திண்ணிய எண்ணங்களைக் கொண்டவன். சிறைபட்ட சீதை தன்னை இராமனிடம் அனுப்பி எங்களை ஆட்கொள்ளுங்கள் என்று வேண்டினான். அவளது உரையினைக் கேட்ட இராவணன் தனது மன உறுதியை வெளிப்படுத்தும் பாங்கினை,

**"அவ்வுரை கேட்டலும் அண்ணல் அம்மணி**
**இவ்வுலகத்தினில் இலங்கை முற்றிடும்**
**செவ்வியர் உளரெனல் செவிடன் ஏழிசை**
**ஒவ்விய திதுவென உவத்தல் போலுமே" (இராவண.பழிபுரி.7:32)**

என்ற பாடலடிகளால் அறியலாம். ஒரு செவிடன் ஏழிசையைக் கேட்டு உள்ளம் ஒன்றி மகிழ்வது போன்றதே இவ்வுலகில் இலங்கையை அழிக்கும் ஆற்றலாகும் என்று இராவணன் மனத்திட்பத்தோடு தன் நாட்டின் மீது தான் கொண்டுள்ள பற்றினை வெளிப்படுத்துகின்றான். ஆரியர்களை திராவிடத் தமிழனாகிய தான் வெல்வேன் என்ற மன உறுதியே காவியம் முழுவதும் புலனாகின்றது.

**அறிவு ஆளுமை**


http://Creativecommons.org//license/by/4.0/.

எந்தச் செயலையும் பகுத்துணர்ந்து செயல்படும் திறமானது அறிவு ஆற்றலாம். தொலை நோக்கு பார்வையுடன் ஆராயும் ஆற்றலானது சிறந்த ஆளுமைத் திறனாகும். இராவணன் இசை மற்றும் கல்விப் புலமையினை பெற்றவன். தன் மிகுதியான அறிவாற்றலால் மக்களை பேணி வருபவன். தூதிற்கு அதிகாயனை அனுப்பியும் திருப்தி இல்லா இராவணன் சிறந்த ஆலோசனை பெற பெரியோர்களை அழைக்கும் முறையினை,

**"...பெரியரைத்தருதிர்நீவிர்பேரமர்த்திறத்தையாய்ந்து**
**தெரிதரற்கெனவேயன்னார்செப்பினாரேவல்தம்மால்"** (இராவணா.போர்.2:4)
**"இதுதெரிந்திலங்கைமூதூர்இருக்குமூதறிவுமாண்டும்**
**மதியுநன்னெறியுஞ்சால்பும்வாய்மையுந்தூய்மைதானும்**
**பதியரசியலுமான்றபழக்கமும்பழுத்துமூத்த**
**முதியவர்வந்துதத்தம்முறைமையினிருந்தாரம்மா"** (இராவணா.போர்:2:5)

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றன. 'இப்போதே பெரியோர்களை அழைத்து வருவீர்' பெரும் போர் ஆற்றலை ஆராய்ந்து தெளிதல் வேண்டும் என்று இராவணன் குறிப்பிடுகின்றான். நாடு நல்வழி பெறுவதற்கான சிறந்த ஆலோசனையை பெரியோர்களால் மட்டுமே அளிக்க முடியும் என்று ஆணையிடம் தன்மையானது இராவணனின் அறிவுப் புலமையை வெளிப்படுத்துகின்றது.

**தொகுப்புரை**

- இராவணனின் ஆளுமையை உணர்த்தும் பொருண்மையுடன் படைக்கப்பட்ட காவியமே இராவணக்காவியம் ஆகும்.
- இராவணன் உளவியலறிஞர் குறிப்பிட்ட ஆளுமைக் கூறுகளான உருவ மற்றும் உள்ள ஆளுமையை பெற்றுள்ளான்.
- உருவ ஆளுமையைக் காட்டிலும் தனது உள்ள ஆளுமையினால் மேன்மையுற்று திகழ்கின்றான். தன் உள்ள ஆளுமைத் திறனால் சிறந்த தலைமையிடத்தையும் இராவணன் பெறுகின்றான்.
- ஆளுமைப் பரிமாணங்களான ஆற்றல், மன, அறிவு போன்ற திறனையும் பெற்றுள்ளான்.
- இராவணன் தன் ஆளுமைத் திறனால் பிறரை ஆட்கொள்ளும் பொருண்மை நோக்கில் படைக்கப்பட்ட இராவண காவியத்தின் சிறப்பினை புலப்படுத்துவதாக இவ்வாய்வுக்கட்டுரை அமைகின்றது.

**சான்றெண் விளக்கம்**

1. இ.பா.வேணுகோபால்,கல்வி உளவியல்,ப.253
2. க.பலராமன், உளவியல் நோக்கில் திருக்குறள், ப.63
3. http:// ta.Wikipedia.Org\S\bbk
4. எஸ்.சுந்தர சீனிவாசன், ஆளுமை மேம்பாடு, ப.18

**துணைநூற்பட்டியல்**

1. சுந்தரசீனிவாசன்.எஸ் - ஆளுமை மேம்பாடு,


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

தாமரை பப்ளிகேஷ்ன்ஸ் (பி) லிட்,
41 - B சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், முதல் பதிப்பு, சென்னை, 2008.

2. பலராமன்.க - உளவியல் நோக்கில் திருக்குறள்,
திருமால் & கோ,
58, நடுத்தெரு, மயிலை, சென்னை - 4.

3. வெற்றியழகன் - இராவண காவியம் மூலமும் உரையும்,
சாரதா பதிப்பகம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

4. வேணு கோபால்.இ.பா - கல்வி உளவியல்,
சாரதா பதிப்பகம்,
6\16, தோப்பு வெங்கடாசலம் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.


http://Creativecommons.org//license/by/4.0/.